**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.48/2025 - PW-7**

| | |
|---|---|
| Name | திரு. அரவிந்த் |
| Husband/Father Name | ராகவன் |
| Village /Area | சென்னை |
| Taluk | சென்னை |
| Occupation | அரசு மருத்துவர் |
| Age | 35 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 24.02.2026.

**(எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் தற்போது சென்னை ஓமந்தூரார் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 01.11.2024 அன்று அரக்கோணம் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்த போது இரவு 10.15 மணியளவில் சரவணன் என்பவர் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு வந்தார். அவருக்கு விபத்து பதிவேடு எண்.3032 கீழ் பதிவு செய்து முதல் உதவி சிகிச்சை செய்தேன். மேற்படி நபர் மயக்க நிலையில் இருந்ததால் அவருடன் வந்த அவரது மனைவி புஷ்பலதாவை மேற்படி நபருக்கு ஏற்பட்ட காயம் குறித்து விசாரித்ததில் அவரது கணவர் அதே தேதியில் இரவு 9 மணியளவில் அவரது முகத்தின் வலது பக்கத்தில் வெட்டு காயம் இருந்தது அதில் நான் தையல் இட்டேன். அதற்கு முன்பு அதில் ரத்த போக்கு அதிகமாக இருந்தது. மேற்படி நபருக்கு CT Scan மற்றும் மேல் சிகிச்சைக்காக பரிந்துரை செய்தேன்.

அவரது முகத்தில் வலது பக்கம் 10x4x1cm வெட்டு காயம் காணப்பட்டது. முகத்தில் ரத்த குழாயிலிருந்து ரத்த போக்கு காணப்பட்டது. அதை தான் நான் தையல் இட்டேன். மேற்படி நபருக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என்று என்னால் வழங்கப்பட்ட விபத்து பதிவேட்டுடன் கூடிய காய சான்று **அ.த.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

காயம் அடைந்தவரை அவர் மனைவி தான் மருத்துவமனைக்கு

சிகிச்சைக்காக அழைத்து வந்தார் என்று சொன்னால் சரிதான். அவரது மனைவி காயம் பட்டவரை அவரது வீட்டருகே காயம்பட்டு கீழே விழுந்து கிடந்ததை பார்த்ததாக என்னிடம் கூறினார். மேற்படி காயம் கரடுமுரடான பாதையில் நிலைதடுமாறி கீழே விழும் போது மேற்கண்ட காயம் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் ஆமாம்.

Jayamangalam Sudhakaran
II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2026.02.24 19:26:05 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.